

1931 ஆம் ஆண்டு பீகார் மானிலத்தில் ஆசாரமான குடும்பத்தில் பிறந்து 1953 ஆம் ஆண்டு சன்யாச தீட்சை பெற்றவர் ஸ்வாமி ஜோதிர்மயா நந்தா அவர்கள். அமெரிக்காவில் மியாமி என்ற மானிலத்தில் 1969 ஆம் ஆண்டு யோக ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஆசிரமம் ஒன்றை நிறுவி யோக வழி முறைகளைக் கற்றுக் கொடுக்கும் அவர் பல்வேறு புத்தகங்கள் எழுதி உள்ளார். அவர் எழுதிய சிறு கதைகள் மனதை சிந்திக்க வைப்பவை. அதில் ஒன்றுதான் இந்தக் கதை.

# ஸ்வாமி ஜோதிர்மயா நந்தா எழுதிய கதைகள்

**சாந்திப்பிரியா**

**(*அபிராமி*, பிப்ரவரி, 2009 இதழில் வெளியான இந்த கட்டுரையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு இது )**

அந்த நகரத்தின் பெயர் அந்தேரி நகரம். ஹிந்தி மொழியில் அந்தேரி என்றால் குருடு என்று அர்த்தம். அது ஒரு விசித்திரமான நகரம். நகைகள் செய்ய பயன்படும் தங்கத்தில் இருந்து ஒரு கிலோ உருளைக் கிழங்கு, மிட்டாய் என எதை வாங்கினாலும் அவற்றின் அனைத்து விலைகளும் ஒன்றுதான். அதற்குக் காரணம் அந்த நகரத்து மன்னனின் கர்வம். அனைவரையும் திருப்திப் படுத்தும் விதத்தில் அப்படிப்பட்ட ஆணை பிறப்பித்திருந்தான். ஆகவேதான் முட்டாள்தனமாக அப்படி ஒரு உத்தரவு போட்டுள்ள மன்னன் ஆண்ட நகரை குருட்டு நகர் என்று அழைத்தனர்.

அந்த ஊரின் பக்கத்து ஊரில் இருந்த ஒரு குருவின் சிஷ்யன் கோவர்தன்தாஸ் என்பவன். அவன் அந்தேரி நகரத்தில் வசிப்பதை நன்மையாகக் கருதினான். அதற்குக் காரணம் தங்கம் மட்டும் விலை குறைவாக இருக்கவில்லை, சாப்பிடும் பண்டங்களும் முக்கியமான இனிப்புப் பண்டங்களின் விலை குறைவானது. ஆசிரமத்தில் அவை அரிதாகவே கிடைக்கின்றன என்று மனதில் நினைத்தவன் “ நாமும் அங்கு போய் வாழலாமே ” என குருவிடம் கேட்டதற்கு அவர் அது ஒரு

பயங்கர நகரம் என்று கூறி அங்கு செல்ல மறுத்து விட்டார். அவன் விடவில்லை பல வாதங்களை எடுத்து வைத்து அவரை கட்டாயப்படுத்த முயன்றான். பார்த்தார் குரு, அவன் ஒரு பாடம் பெற வேண்டும் என நினைத்து அவனிடம் “ நீ வேண்டுமானால் அங்கு போய் தங்கிக் கொள். ஆனால் உனக்கு எப்பொழுதாவது தீர்க்க முடியாத கஷ்டம் நேர்ந்தால் என்னை நினைத்துக் கொள்” என்று கூறி அவனை அனுப்பி விட்டார்.

அந்த ஊருக்குச் சென்ற கோவர்தன்தாஸ் வாழ்க்கையை அனுபவித்தபடி தின்று கொழுத்தான். அதன் விளைவு குண்டாகி விட்டவன் கழுத்து மிகவும் பெருத்து விட்டது. நில நாட்கள் சென்றன. அந்த ஊர் அரசனிடம் விசித்திரமான ஒரு வழக்கு சென்றது. ஒரு விவசாயி அரசனிடம் சென்று சுவர் ஒன்று இடிந்து விழுந்து தன்னுடைய மாடு செத்து விட்டது என அதற்கு நீதி கேட்டான். “ சுவரை இழுத்து வாருங்கள் ” என மூடனான மன்னன் கட்டளை இட்டான். “அந்த சுவர் என்ன செய்யும் , அது பேச முடியாதே ஆகவே அந்த சுவற்றின் வீட்டுக்காரனை அழைத்து வரலாம்” என மந்திரி கூற அந்த வீட்டுக்காரன் அழைத்து வரப்பட்டான். வந்த வீட்டுக்காரனோ “ ஐயா, நான் என்ன பாவம் செய்தேன், அந்த சுவரைக் கட்டியவன் அல்லவா சுவற்றை வலுவாகக் கட்டவில்லை ” என்று தன் பக்க வாதத்தைக் கூற சுவற்றைக் கட்டியவன் அழைத்து வரப்பட, வந்த அவன் “ ஐயா, நான் சிமெண்ட் கலவை செய்து கொண்டு இருந்த பொழுது எதிர் பக்கத்தில் நடனமாடிக் கொண்டு இருந்த ஒரு பெண்ணின் அழகில் மயங்கி அவளை கவனித்ததினால் தவறு ஏற்பட்டு விட்டது “ என்று தன்னுடைய நியாயத்தைக் கூறினான்.

அந்தப் பெண் அழைத்து வரப்பட்டாள். நேரமாகி விட்டதினால் அவளிடம் ஒன்றும் கேட்காமல் அவளுக்குத் தூக்கு தண்டனை விதித்தான் மன்னன். ஆனால் ஒல்லியாக இருந்த அவள் கழுத்து தூக்குக் கயிற்றில் இருந்து வெளியே வந்தது. “ நேரம் ஆகி விட்டது மாலைக்குள் தூக்கு தண்டனையை நிறைவேற்ற வேண்டும்“ என மன்னன் கோபமுற அந்த கயிற்றுக்கு தேவையாக குண்டு கழுத்தை கொண்டவனைத் தேட கோவர்தன்தாஸ் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டான். அவனை தூக்கு மேடைக்கு கொண்டு சென்றனர். வருத்தமுற்ற அவன் “ எத்தனைக் கூறியும் குருவின் பேச்சை

மதிக்காமல் இங்கு வந்து மாட்டிக் கொண்டோமே ” என அழுதபடி குருவை நினைத்துக் கொண்டான். கோவர்தன்தாஸ் நினைத்த மட்டில் குருவும் அங்கு வந்து விட்டார். அவர் மன்னனிடம் “ ஐயா என்னுடைய சிஷ்யனை தூக்கில் போடாதீர்கள் அவனுக்கு பதில் என்னை தூக்கில் போடுங்கள் ” எனறு கெஞ்சத் துவங்கினார்.

குருவைத் தூக்கில் போடக் கூடாது என்னைத் தூக்கில் போடுங்கள் என கோவர்தன்தாஸ் அரசனிடம் வேண்டுகோள் விட, குருவிடம் சிஷ்யனுக்குப் பதில் அவர் ஏன் தன்னை தூக்கில் போடுமாறு கட்டாயப்படுத்துகின்றார் என்று காரணம் கேட்ட மன்னனிடம் “ ஐயா, இவன் தூக்கில் தொங்கப் போகும் நேரம் மிக புண்ணிய காலம். இறந்தவுடன் அவன் நேராக சொர்கத்திற்கு சென்று விடுவான். ஆகவே அவனுக்கு முதலில் நான் சொர்கம் செல்ல விரும்புகின்றேன். ஆகவேதான் என்னைத் தூக்கில் போடுங்கள் என்று கெஞ்சுகிறேன் ” எனக் கூறவும் அதைக் கேட்ட மன்னன் கோபமுற்றுக் கத்தினான் ” என்னை என்ன அத்தனை முட்டாள் என எண்ணி விட்டாயா ? சொர்கத்துக்குப் போக உங்களை விட எனக்குத்தான் அதிக யோக்கிதை உள்ளது. அதை உங்களுக்கு விட்டுக் கொடுப்பேனா?” என்று கூறிவிட்டு தானே தூக்கு மேடையேறி தன்னைத் தூக்கில் இடுமாறு ஆணையிட மன்னன் கழுத்தில் தூக்குக் கயிறு மாட்டப்பட அவன் மடிந்து போனான். குருவும் சிஷ்யனை அழைத்துக் கொண்டு அந்த அந்தேரி நகரத்தை விட்டு வெளியேறினார்.

